கூட்டுத்துறையில் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்துதல்

*வினா எண். 1091—திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு நிறுவனமான டிட்கோவும் அசோக் லேலண்ட் நிறுவனத்தாரும் சேர்ந்து கூட்டுத்துறையில் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை புதுக் கோட்டையில் ஏற்படுத்த உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் டிட்கோ மூலதனம் என்ன? அசோக் லேலண்ட் மூலதனம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) ஆம்;

(ஆ) இந்த திட்டத்தினுடைய மதிப்பீடு ஏறக்குறைய 15 கோடி ரூபாய்; சுமார் 500 பேருக்கு வேலை கிடைக்கும் விதத்தில் அசோக் லேலண்ட் நிறுவனமும் டிட்கோ நிறுவனமும் இணைந்து இந்த நிறுவனத்தை புதுக்கோட்டையிலே ஆரம்பிக்க இருக்கிறார்கள்.

திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு தலைவரவர்களே, புதுக் கோட்டையிலே ஆரம்பிக்கப்படவிருக்கிற அந்த தொழிற் சாலைக்கு எத்தனை ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக் கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவ ரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதுக்கோட்டையிலே வெகு விரைவில் அந்த தொழிற்சாலை துவங்கவேண்டுமென்று காட்டுகிற ஆர்வத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன், இப்போது முடிவுகள் எடுத்த நிலையில் இருக்கிறது. நில ஆர்ஜித வேலை இன்னும் நடக்கவில்லை. வெகு விரைவில் அந்த பணிகள் முடிவுறும்.

சென்னையிலுள்ள தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான ஐ. ஏ. எஸ் பயிற்சி நிலையம்.

*வினா எண். 1092—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னையிலுள்ள தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஐ. ஏ. எஸ். பயிற்சி கொடுக்கும் நிலையத்தில் (P.E.T.C.) ஆண்டுக்கு எத்தனை மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்?

(ஆ) முழு ஒதுக்கீடு நிரப்பப்படாமல் காலி இடங்கள் ஏற்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை *அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

[*172ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS